சூசை (ஆடுதுறை), சண்முகம் (பொறையாறு), உதவிப் பொறியாளர்கள் முத்துமணி, வீரமணி, சரவணன், விஜயபாஸ்கரன் மற்றும் வீரப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

# புத்தூர் அரசு கல்லூரியில் முத்தமிழ் விழா

**சீர்காழி, மார்ச் 11:** சீர்காழியை அடுத்த புத்தூர் பொன்மனச்செம்மல் புரட்சி தலைவர் எம்ஜிஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த் துறை சார்பில் முத்தமிழ் விழா புதன்கிழமை நடைபெற்றது.



**புத்தூர் அரசு கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழா.**

கல்லூரி முதல்வர் தே.லட்சுமி தலைமை வகித்தார். ஏவிசி கல்லூரி முன்னாள் துணை முதல்வர் துரை.குணசேகரன் பங்கேற்று வாழ்வே உன்னோடுதான் என்ற தலைப்பில் தமிழ் மொழியின் சிறப்புகளை பற்றி பேசினார். சீர்காழி அரசு மாவட்ட இசைப்பள்ளி மாணவ, மாணவிகளின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து தேவார பாடல்கள் பாடப்பட்டு நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தமிழ்த்துறை உதவி பேராசிரியர் மா.அனுசுயா, ஆங்கிலத்துறை உதவி பேராசிரியர் ச.வினோத் ஆகியோர் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். தமிழ்த்துறை தலைவர் சசிகுமார் வரவேற்றார். உதவி பேராசிரியர் அ.கணேசன் நன்றிகூறினார்.